Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-


+91 9853719337, 7436914247


# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 100 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 100 ▸▸Sunday ▸▸pages 4 ▸▸Rs.5/-

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(5–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–19

பிறை: வளர்பிறை

திதி
திரயோதசி நண்பகல் 1.24 வரை
பிறகு சதுர்த்தசி

நட்சத்திரம்:
சதயம் காலை 6.58 வரை பிறகு பூரட்டாதி

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
மாலை 4.30–6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.

சூலம் – மேற்கு.

நல்ல நேரம் :
காலை 7–8 மணி. மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் .................... | பொறுமை |
| ரிஷபம்..................... | அமைதி |
| மிதுனம் ................... | போட்டி |
| கடகம் ..................... | ஆதரவு |
| சிம்மம் .................... | உற்சாகம் |
| கன்னி ...................... | நட்பு |
| துலாம் ..................... | பெருமை |
| விருச்சிகம் ............... | ஆக்கம் |
| தனுசு ....................... | புகழ் |
| மகரம் ...................... | அமைதி |
| கும்பம்..................... | நன்மை |
| மீனம் ....................... | பக்தி |

# கரூர் சம்பவத்தில் நீதிமன்ற வழிகாட்டுதல் படி நடவடிக்கை: முதல்வர் ஸ்டாலின் உறுதி


**சென்னை,அக்.5:**

"கரூர் துயரத்தில் உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) தனது விசாரணையைத் தொடங்கும். இதன் மூலம், முழு உண்மையையும்வெளிக்கொண்டு வருவோம் என்று மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்." என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கரூர் துயரம் குறித்து உயர் நீதிமன்றம் கூறியுள்ள கருத்துகள், வழிகாட்டுதல்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகத் தீவிரமாக கவனத்தில் கொண்டு செயலாற்றி வருகிறது.

கரூரில் நடந்த துயரத்தால் நாம் அனைவருமே நெஞ்சம் கலங்கிப் போயிருக்கிறோம். தம் அன்புக்குரியோரை இழந்து தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் கண்ணீரையும் கண்டு தவிக்கிறேன்.





உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) தனது விசாரணையைத் தொடங்கும். இதன் மூலம், முழு உண்மையையும்வெளிக்கொண்டு வருவோம் என்று மாநிலத்தின் முதலமைச்சராக மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். அனைத்து மட்டங்களிலும் பொறுப்பு உறுதி செய்யப்படும்.

பலவற்றிலும் இந்தியாவுக்கே முன்னோடியான தமிழ்நாடு, கூட்ட நெரிசல் விபத்துகளைத் தவிர்ப்பதிலும் நாட்டுக்கு வழிகாட்டும். மாநிலம் முழுவதும் துறைசார் வல்லுநர்கள், அரசியல் கட்சியினர், செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரோடும் கலந்தாலோசித்து ஒரு முழுமையான 'நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) வடிவமைப்போம். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் பின்பற்றத்தக்க மாடலாக இது அமையும்.

துடைக்க முடியாத இந்தத் துயரச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் நோக்கோடு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல் ஒரு நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்போம். இந்தக் கூட்டு முயற்சியில் அனைவரது யோசனைகள், ஆலோசனைகளையும் வரவேற்கிறேன். ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பில்லாதது. நம் மக்களின் இன்னுயிரைக் காக்கவும், இனி இப்படி ஒரு பெருந்துயரம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே நிகழாமல் தடுக்கவும் ஒன்றிணைவோம்." என்று கூறியுள்ளார்.

## "பாஜகவின் 'சி டீம்' தான் தவெக தலைவர் விஜய்"



புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, பேசிய அவர், "முதல்வர் ஸ்டாலின் தமிழகத்தை என்றைக்கும் தலைகுனிய விடவில்லை. யார் தலைகுனியவிட்டார்கள் என்பது நேற்று உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்த வார்த்தைகளை பார்த்தால் தெரியும்.

தமிழகத்தில் இடம் கிடைக்காத பாஜக தமிழகத்தில் யாராவது ஆள் கிடைப்பார்களா? என்று பார்த்துக் கொண்டு இருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு எந்த ஆதாயமும் கிடைக்காது. பாஜகவின் 'சி' டீம் தான் விஜய். இதை முதன்முதலில் சொன்னது நான் தான். தவெகவினர் நீதிமன்றம் குறித்து பேசுவதற்கு நீதிமன்றமே நடவடிக்கை எடுக்கும்.

விஜய்யைப் பற்றி கருத்து சொல்ல விரும்பவில்லை. தவெக தலைவர் விஜய்யை காப்பாற்றும் எண்ணம் திமுகவுக்கு இல்லை. யாரையும் அநாவசியமாக கைது செய்ய வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. சட்டம் தன் கடமையை செய்யும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வரலாற்றில் முதல் முறையாக பேராயர் ஆன பெண்!



**இங்கிலாந்து,அக்.5:**

இங்கிலாந்து திருச்சபையின் 1400 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் பெரியாராக நியமிக்கப்பட்டுள்ளார்.

63 வயதான சாராம் முல்லாலி இங்கிலாந்தில் உள்ள கேன்டர்பரி தேவாலயத்தில் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார். சாராம் முல்லாலி ஆங்ளிகன் சபையின் 106-வது ஆவார்.

இவர் 2018 ஆம் ஆண்டு முதல் லண்டன் ஆயராக பணியாற்றி வந்தார். இந்நிலையில் கடந்த நவம்பரில் பேராயர் ஜஸ்டின் வெல்பி ராஜினாமா செய்த காலியிடத்தில் சாராம் முல்லாலி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான தேர்வு ஜனவரியில் நடைபெற்றது.

11 ஆண்டுகளுக்கு முன்பு சபையால் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தமே பெண்ணான முல்லாலி, பேராயர் பதவிக்கு வர வழிவகுத்தது.

இவர் பேராயராக இருந்தபோது, ஒரே பாலின தம்பதிகளை ஆசீர்வதித்தது போன்ற சம்பவங்களால் செய்திகளில் இடம்பிடித்தார். இதனால், சுமார் எட்டரை கோடிக்கும் அதிகமான ஆங்ளிகன் விசுவாசிகள் மத்தியில் இவரது நியமனம் சில சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

## டிரம்ப் தலைமையிலான காசா அமைதி ஒப்பந்த முயற்சிகளுக்கு பிரதமர் மோடி வரவேற்பு


**புதுடில்லி,அக்.5:**

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முன்மொழிந்த அமைதித் திட்டத்திற்கு ஹமாஸ் சாதகமாக பதிலளித்துள்ளது.

கடந்த திங்களன்று அமெரிக்கா விரைந்த இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு அதிபர் டிரம்ப் முன்மொழிந்த 20 அம்ச காசா அமைதி திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில்இதுதொடர்பாக ஆலோசித்து வந்த ஹமாஸ் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக உயிருடன் இருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளையும், இறந்த கைதிகளின் உடல்களையும் திரும்ப ஒப்படைக்க சம்மதிப்பதாக தெரிவித்துள்ளது.

மேலும் ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டபடி, ஒருமித்த கருத்துடன் உருவாக்கப்பட்ட ஒரு சுயாதீன தொழில்நுட்ப வல்லுநர் குழுவிடம் காசா பகுதியை நிர்வகிக்கும் பொறுப்புகளை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.



இருப்பினும் திட்டத்தின் பிற விவரங்களை விவாதிக்க மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக ஹமாஸ் கூறியுள்ளது.

டிரம்பின் 20 அம்ச அமைதி திட்டத்தில் உடனடி போர்நிறுத்தம், கைதிகள் பரிமாற்றம், காசாவிலிருந்து இஸ்ரேலியப் படைகளை படிப்படியாக திரும்பப் பெறுதல், ஹமாஸ் தங்கள் ஆயுதங்களை கைவிட்டு அரசியலில் இருந்து வெளியேறுவது மற்றும் சர்வதேச மேற்பார்வையின் கீழ் ஒரு இடைக்கால அரசாங்கத்தை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

இந்நிலையில், பணயக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் அமைப்பு ஒப்புக்கொண்டதற்கு பிரதமர் மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான காசா அமைதி ஒப்பந்த முயற்சிகள் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை அடைந்துவருவதை நாங்கள் வரவேற்கிறோம். நீடித்த மற்றும் நியாயமான அமைதியை நோக்கிய அனைத்து முயற்சிகளையும் இந்தியா தொடர்ந்து வலுவாக ஆதரிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

## பணய கைதிகளை விடுவிக்கும் ஹமாஸின் முடிவுக்கு ஐ.நா மற்றும் உலக நாடுகள் வரவேற்பு



**புதுடில்லி,அக்.5:**

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் காசா அமைதி திட்டத்தை ஹமாஸ் அமைப்பு ஏற்று, இஸ்ரலிய பணய கைதிகளை விடுவிக்க தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இதைத்தொடர்ந்து காசா மீதான தாக்குதலை உடனே நிறுத்த இஸ்ரேலை டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் கத்தார் உள்ளிட்ட நாடுகள் ஹமாஸின் முடிவை அமைதிக்கான முக்கிய படியாக வர்ணித்தன.

பிணைக் கைதிகளை விடுவிப்பதும், போர் நிறுத்தம் செய்வதும் இப்போது சாத்தியம் என்று பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் கூறினார்.

இது ஒரு முக்கியமான முன்னேற்றப் படி என்று இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கூறினார். மத்தியஸ்தம் செய்யும் கத்தார், எகிப்து மற்றும் அமெரிக்காவுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்று அவர் கூறினார்.

ஹமாஸின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையும் வரவேற்றது. இந்த துயரமான மோதலை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருக்கும் ஐ.நா. தலைவர் அன்டோனியோ குட்டெரெஸ் அழைப்பு விடுத்தார்

நிரந்தர போர் நிறுத்தம் உடனடியாகநிறுவப்படவேண்டும், அனைத்து பணயக்கைதிகளும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும், காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் செய்வதில் எந்த கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடாது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

## நாமக்கல் மாவட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பிரசாரத்துக்கு அனுமதி மறுப்பு?

**நாமக்கல்,அக்.5:**

தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்து வருகிறார். எடப்பாடி பழனிசாமி. அதன்படி கடந்த 19-ந்தேதி நாமக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட ராசிபுரம் மற்றும் சேந்தமங்கலம் தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார்.

அதைத்தொடர்ந்து கடந்த மாதம் 20-ந்தேதி நாமக்கல் மற்றும் பரமத்திவேலூரிலும், 21-ந் தேதி திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையத்திலும் எடப்பாடி பழனிசாமியின் பிரசாரம் நடக்க இருந்தது. ஆனால் மழை காரணமாக அவரின் சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டது. அதற்கு பதிலாக அக்டோபர் 5 மற்றும் 6-ந்தேதிகளில் பிரசாரம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.




அதன்படி இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை திருச்செங்கோடு தொகுதியில் திருச்செங்கோடு அண்ணாசிலை அருகிலும், அதன்பிறகு குமாரபாளையம் தொகுதியில் ஓலப்பாளையத்தில் உள்ள தியேட்டர் அருகிலும் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்ய போலீசில் அனுமதி கேட்கப்பட்டது. அதேபோல், நாளை (6-ந்தேதி) மாலையில் நாமக்கல் பழைய பஸ் நிலையம் அருகிலும், அதைத்தொடர்ந்து பரமத்திவேலூர் தொகுதிக்கு உட்பட்ட பரமத்திவேலூர்-பொத்தனூர் நான்கு ரோடு சந்திப்பிலும் எடப்பாடி பழனிசாமி பேச போலீசில் அனுமதி கேட்கப்பட்டது.

இதற்கிடையே அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்ய திருச்செங்கோடு, குமாரபாளையம், நாமக்கல், பரமத்திவேலூர் ஆகிய பகுதிகளில் அனுமதி கேட்ட இடங்களுக்கு போலீசார் அனுமதி தர மறுத்துவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து போலீசாரிடம் கேட்டபோது தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் ஓரங்களில் பொதுக்கூட்டம் நடத்த அரசியல் கட்சிகளுக்கு கோர்ட் அனுமதி கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அவர்கள் கேட்ட இடங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது என்றனர். எனவே எடப்பாடி பழனிசாமி வேறு இடத்தில் பிரசாரம் செய்யவும், பட்டா இடத்தில் 3 ஆயிரம் பேர் பங்கேற்கும்வகையில்கூட்டத்தை நடத்திக்கொள்ளவும் அறிவுறுத்தி உள்ளதாக கூறப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் நாளையும், நாளை மறுநாளும் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் செய்ய உள்ள நிலையில் இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை.

## ஐயப்பனுக்கு வழங்கிய 30 கிலோ தங்கம் மாயமா?



**திருவிதாங்கூர்,அக்.5:**

சபரிமலை ஐயப்பன் கோவில் பணிகளுக்காக 27 ஆண்டுகளுக்கு முன் தொழிலதிபர் விஜய் மல்லையா வழங்கிய 30.3 கிலோ தங்கம் மாயமானதாக சந்தேகிக்கப்படும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செப்டம்பர் 4, 1998 அன்று, சபரிமலையில் உள்ள கருவறை, கூரை மற்றும் துவாரபாலக சிற்பங்கள் ரூ. 18 கோடி செலவில் 30.3 கிலோ தங்கம் மற்றும் 1,900 கிலோ செம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி செய்யப்பட்டன.. இந்த தங்கத்தை தொழிலதிபர் விஜய் மல்லையாவால் பரிசாக அப்போது வழங்கினார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று திருவிதாங்கூர் தேவசம் போர்டு உறுதி அளித்துள்ளது.


தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

## ஆதிகேசவபெருமாள் பவித்ரா விழா




2ம் நாள் காலை பவித்ரா விழா சென்னை மயிலாப்பூர் ஆதிகேசவபெருமாள் பவித்ரா விழா.

## எரமலூர் பெருமாள் கோவிலில் புரட்டாசி சனிக்கிழமை வைபவம்...!



**வந்தவாசி, அக் 05:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த எரமலூர் ஸ்ரீ சுந்தர வரத லஷ்மி நாராயண பெருமாள் கோவிலில் நேற்று புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன்,வந்தவாசி.**

## டெங்கு காய்ச்சல் பாதிப்பு இந்த ஆண்டு 20 ஆயிரமாக உயரும்

**சென்னை, அக். 5:** பருவ கால மாற்றத்தால் ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு பகுதியில் காய்ச்சல் பரவுவது வழக்கமாகி விட்டது. கேரளாவில் ஜூன், ஜூலை மாதங்களில் பரவலாக காணப்படுகிறது.




சென்னையில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிக அளவில் பரவுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கி ஏப்ரல் வரை நீடித்தது. இந்த ஆண்டும் காய்ச்சல் மற்றும் சுவாச சம்பந்தமான வைரஸ் தொற்றுக்கள் பரவி வருகின்றன. சாதாரண சளி, காய்ச்சல், இருமல் என்ற அறிகுறிகளுடன் வரும் பலருக்கு டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பதும் தெரியவந்து உள்ளது.

இன்புளூயன்சா வகை காய்ச்சல் அனைத்து தரப்பு மக்களையும் பாதித்து வரும் நிலையில் டெங்கு பாதிப்பும் அதிகரித்து வருவது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

தினசரி 60 முதல் 70 பேர் வரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதாக சுகாதாரத்துறை கூறுகிறது. இந்த ஆண்டில் இதுவரை 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். இதுவரை 7 பேர் உயிரிழந்து உள்ளார்கள்.

வரும் காலங்களில் டெங்கு காய்ச்சல் இன்னும் அதிகரிக்கும் என்பதால் இந்த ஆண்டு இறுதிக்குள் 20 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படலாம் என்று கணித்து உள்ளார்கள்.

இன்புளூயன்சா மற்றும் டெங்கு காய்ச்சலுக்கு பொதுவான அறிகுறிகளாக காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல், உடல்வலி, சோர்வு காணப்படும்.

சாதாரண மருந்துகள் எடுத்து 24 மணி நேரத்துக்குள் குறையாவிட்டால் மருத்துவரை கட்டாயம் அணுக வேண்டும். நோய் தாக்கியவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் வெளியேறும் நீர் திவலைகள் மூலம் காய்ச்சல் பரவும். எனவே தும்மும் போதும், இருமும் போதும் வாய், மூக்கை மூடிக்கொள்ள வேண்டும். அடிக்கடி கைகளை கழுவ வேண்டும். காய்ச்சல் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். திரவ நிலை உணவுகளை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

பொதுமக்கள் தங்கள் வீடுகளின் அருகில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்ற வேண்டும். மேலும் வீட்டில் உள்ள 'பிரிட்ஜ்' பின்பக்கம் தண்ணீர் வடிந்து தேங்கக்கூடிய தொட்டியை வாரத்தில் ஒரு முறையாவது தூய்மை செய்ய வேண்டும்.

மொட்டை மாடியில் மழைநீர் தேங்கக் கூடிய வகையிலான பொருள்கள் இருந்தால் உடனடியாக அகற்ற வேண்டும். அப்போதுதான் 'ஏடிஸ்' கொசு பரவலைத் தடுக்க முடியும்.

'ஏடிஸ்' வகை கொசுக்கள் உற்பத்தியைத் தடுப்பது மக்களிடையே உள்ள பொறுப்பு என்று சுகாதாரத்துறை கூறி உள்ளது.

## கரூர் பேரிடர் மூலம் முதலமைச்சர்தான் நம்மை காப்பார் என்பது உறுதியாகி உள்ளது

**தமிழக அரசு பெருமிதம்**



**சென்னை, அக்.5:** கரூர் சம்பவம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

கரூர் விபத்து மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு. இந்தக் கொடிய சம்பவம் தமிழ்ச் சமுதாயத்திற்கு உழைப்பவர் யார், தமிழ்ச் சமுதாயத்தைத் தமக்காக தவறான வழியில் அழைத்துச் செல்பவர்கள் யார் யார் என அடையாளம் காட்டிவிட்டது.

இந்தியத் திருநாட்டில், தம்முடைய அயராத உழைப்பால் ஒவ்வொரு நாளும் பாடுபட்டு, புதிய புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி தமிழ்நாட்டை "இந்திய அளவில் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு" எனும் புகழை நிலைநாட்டியுள்ள முதலமைச்சரை தமிழ்நாட்டு மக்கள் மனதாரப் பாராட்டி, வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

தீமை வந்தால் அதிலும் ஒரு நன்மை உண்டு. அந்தத் தீமைதான் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அளந்து காட்டும் கருவியாகிறது என்று கலைஞர் ஒரு குறளுக்கு உரை வகுத்துள்ளார்.

இந்தத் திருக்குறள், கரூர் பேரிடரின் மூலம், துன்பம் வருகின்றபோது, நம்மைக் கைவிடுவோர் யார்? நம்மைக் காப்பவர் யார்? காப்பவர் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் என்பதைத் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல உலகுக்கே உணர்த்திவிட்டது. இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது.

## வேளாண் படிப்புக்கு நுழைவுத் தேர்வு - எம்.பி. ரவிக்குமார் எதிர்ப்பு




**சென்னை, அக்.5:** நாட்டில் உள்ள அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களிலும், 20% இளங்கலை இடங்கள் இனி CUET-ICAR நுழைவுத் தேர்வு மூலம் நிரப்பப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

12ம் வகுப்பில் உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம் அல்லது வேளாண்மைப் பாடங்களைப் படித்த மாணவர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வேளாண் படிப்புக்கு தேசிய அளவில் நுழைவுத் தேர்வு நடத்தும் மத்திய அரசின் முடிவுக்கு விசிக எம்.பி. ரவிக்குமார் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "வேளாண் படிப்புக்கு தேசிய அளவில் நுழைவுத் தேர்வு நடத்தும் ஒன்றிய அரசின் அறிவிப்பு மாநில உரிமைக்குள் தலையிடுவதாகும்.

இதுவரை ப்ளஸ் டூ மதிப்பெண் அடிப்படையில் மாநில அரசின் கீழ் நடைபெறும் அட்மிஷனை நுழைவுத் தேர்வு என்ற பெயரில் தனது பிடிக்குள் கொண்டுவரப் பார்க்கும் மோடி அரசின் சதியைத் தமிழ்நாடு முதலமைச்சர் முறியடிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

## அதிமுக-வின் "தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்" பிரசாரம் ரத்து



**சென்னை, அக்.5:** அதிமுக சார்பில் தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம் என்ற பிரசாரம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இன்று 2 இடங்களில் நடைபெற இருந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் தேர்தல் பிரசாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, குமாரபாளையம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளில் இன்று நடைபெறவிருந்த எடப்பாடி பழனிசாமியின் பரப்புரை ரத்து செய்யப்பட்டுள்ளது.எடப்பாடி பழனிசாமி பிரசாரத்திற்கு அதிமுகவினர் தேர்வு செய்த இடங்கள் நெடுஞ்சாலை பகுதியாக இருப்பதால் காவல்துறையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

பிரசாரம் நடைபெறுவதற்கு ஒருநாளே இருக்கும் நிலையில் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், மேகுமாரபாளையம், திருச்செங்கோடு தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்யும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேவரோடை ஸ்ரீநிவாச பெருமாள் திருக்கல்யாணம்



**சீர்காழி, அக் , 05:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்துள்ள கேவரோடை கிராமத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீநிவாச பெருமாள் கோயிலில் ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு பால், தயிர், பன்னீர் உட்பட 16 வகையான அபிஷேகங்கள் செய்து சிறப்பு பூஜை செய்தனர்.

பின்னர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு பெருமாள் அருள் பாலித்தார். முக்கிய நிகழ்வாக ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு பஞ்சராத்திர ஆகம முறைப்படி வெகு விமர்சையாக திருக்கல்யாணம் நடைபெற்றது.

காப்பு கட்டுதல், மாலை மாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு வைபவங்கள் நடைபெற்றன. கேவரோடை ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் புரட்டாசி மாத வழிபாட்டை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இங்கு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கல்யாணம் 23-வது ஆண்டாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கொடி ஏற்றத்துடன் தொடங்கிய விழா 10 நாட்கள் சிறப்பாக நிறைவு பெற்றது.

## சீர்காழி அருகே காரைமேடு சித்தர்புரம் ஸ்ரீ சத்குரு ராஜேந்திர சுவாமிகளின் 8-ஆம் ஆண்டு குருபூஜை விழா



**சீர்காழி , அக் , 05:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள காரைமேடு சித்தர்புரம் 18 சித்தர்கள் பீடம் ஒளிலாயம் நிறுவனர் ஸ்ரீ சத்குரு ராஜேந்திர சுவாமிகளின் 8 ஆம் ஆண்டு குருபூஜை விழா நடைபெற்றது.

உலக நன்மை வேண்டியும் , உலகத்தில் தானம் , தானியம் மற்றும் விவசாயம் அபிவிருத்தி வேண்டியும் ஸ்ரீ சிவசங்கர மஹேஸ்வர - மஹேஸ்வரி மஹா யாக வைபவம் நடைப்பெற்றது.

விழாவிற்கு அதிமுக மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் எஸ்.பவுன்ராஜ் தலைமை தாங்கினார், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அதிமுக மாவட்ட அவை தலைவர் பி.வி.பாரதி, மாநில அம்மா பேரவை துணை செயலாளர் இ. மார்கோனி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். ஏராளமான பெண்கள் பொதுமக்கள். பக்தர்கள் திரளாக பங்கேற்றனர்.

அனைவருக்கும் மதிய உணவு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒளிலாய நிர்வாகிகள் நாடி.க.செல்வமுத்துகுமரன்., நாடி. ஆர் . செந்தமிழ், நாடி .ஆர். மாமல்லன், நாடி ஆர்.பரதன் ஆகியோர் செய்திருந்தனர்.

## சோழிங்கநல்லூரில் 2 வழித்தடங்களிலும் 8 மாடி கட்டிடத்தின் வழியாக மெட்ரோ ரெயில்கள் செல்லும்



**சென்னை, அக். 5:** சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வருகிறது. இதில் மாதவரம் முதல் சிப்காட் வரை 3-வது வழித்தடத்திலும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை 5-வது வழித்தடத்திலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த திட்டத்தில் சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கும் பொதுமக்கள் செல்லும் வகையில் சோழிங்கநல்லூரில் உயர்மட்ட மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

இந்த ரெயில் நிலையம் 2 வழித்தட மெட்ரோ ரெயில்களும் சந்திக்கும் இடமாகவும், ஒரு ரெயிலில் இருந்து இன்னொரு ரெயிலுக்கு மாறும் இடமாகவும் திகழ்கிறது. மேலும் இந்த மெட்ரோ ரெயில் நிலையம் தனித்துவமான வடிவமைப்பை கொண்டதாகவும், பல சுவாரசியமான அம்சங்கள் கொண்டதாகவும் அமைய உள்ளது.

இந்த ரெயில் நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகில் 8 மாடிகளை கொண்ட கட்டிடம் கட்டப்பட உள்ளது. இந்த கட்டிடம் வழியாக மெட்ரோ ரெயில்கள் செல்ல உள்ளன.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

சோழிங்கநல்லூரில் அமைய உள்ள 8 மாடி கட்டிடம் வழியாக மெட்ரோ ரெயில்கள் செல்ல உள்ளன. மாதவரம்- சோழிங்கநல்லூர் இடையேயான ரெயில்கள் மேல் நடைமேடையிலும், மாதவரம் - சிப்காட் இடையேயான மெட்ரோ ரெயில்கள் கீழ் நடைமேடையிலும் செல்லும். இதில் முதல் மட்டத்தில் ஒரு பிளாசா கட்டப்பட உள்ளது.

3-வது மட்டத்தில் மாதவரம் - சிப்காட் ரெயிலுக்கான நடைமேடையும், 4-வது மட்டத்தில் மாதவரம் - சோழிங்கநல்லூர் ரெயிலுக்கான நடைமேடையும் அமைய உள்ளது.

இந்த ரெயில் நிலைய வடிவமைப்பானது மேலே இருந்து பார்க்கும்போது ஒரு பிளஸ் அடையாளமாக தெரிகிறது. இதில் 2 வழித்தடங்களும் குறுக்காக கடப்பது போல் காணப்படுகிறது. பயணிகள் ஒரு வழித்தடத்தில் இருந்து இன்னொரு வழித்தடத்திற்கு மாறக்கூடிய வகையில் வசதி செய்யப்பட்டு உள்ளது.

சாலையில் இருந்து 28.8 மீட்டர் உயரத்தில் 5-வது வழித்தட ரெயிலுக்கான நடைபாதையும், அதற்கு கீழே சாலையில் இருந்து 21.8 மீட்டர் உயரத்தில் 3-வது வழித்தட ரெயிலுக்கான நடைபாதையும் கட்டப்படுகிறது.

8 மாடி கட்டிடத்தில், முதல் தளம் வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்படுகிறது. ரெயில் 5-வது மாடி வழியாக செல்லும். 6-வது முதல் 8-வது மாடி வரை மெட்ரோ ரெயில் அலுவலகம், சில்லறை விற்பனை நிலையங்கள் இடம்பெறும்.

சோழிங்கநல்லூருக்கு அருகில் தற்போது கட்டப்பட்டு வரும் துரைப்பாக்கம் ரெயில் நிலையமும், சோழிங்கநல்லூரை போன்ற அம்சங்களை கொண்டிருக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சிறப்பு அலங்காரம்




தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நவராத்திரி விடையாற்றி விழாவை முன்னிட்டு நேற்று (03.10.2025) நமது ராமானுஜர் உழவாரப்பணி குழுவினருக்கு பாராட்டு விழா,பெருமாள் ஏகாந்த சேவை தாயார் சிறப்பு அலங்காரம் மூலப்பெருமாள் சந்தன காப்பு அலங்காரம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நவராத்திரி விழா உபயதார்கள் மற்றும் பணியாளர்கள் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.
நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

# கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் ஜனவரியில் திறப்பு

**முதல்வர் மு.க. ஸ்டாலின்**



**மானாமதுரை,அக்.5:**

கீழடியில் திறந்த வெளி அருங்காட்சியகம் வருகிற ஜனவரியில் திறந்துவைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கீழடி கண்டேன், பெருமிதம் கொண்டேன்! திறந்துவைத்த 30 மாதங்களில் 12 லட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது கீழடி அருங்காட்சியகம். வெளி மாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்துவருவோரும் தமிழரின் தொன்மை கவினுறக் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது கண்டு வியப்பதை திடீர் ஆய்வுக் காக அங்கு சென்றபோது அறிந்து கொண்டேன்.

கீழடி திறந்தவெளி அருங்காட்சிய கம் வருகிற ஜனவரியில் திறக்கப்படவுள்ளது. அருங்காட்சியகம் வருகிற டிசம்பர் மாதத்திலேயே மக்கள் பார்வைக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றுமொரு அருங்காட்சியகம் எழுந்து வருகிறது. பூம்புகார் ஆழ் கடல் ஆய்வுகள் தொடங்கிவிட்டன. நிலத்திலும், நீரிலும், இலக்கியத்திலும் ஆய்ந்து இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ் நிலத்திலிருந்து தொடங்கித்தான் எழுதப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து வருகிறது திராவிடமாடல் அரசு என்றார் அவர்.

முன்னதாக, ராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பங்கேற்று மதுரை விமான நிலையத்துக்கு வரும் வழியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கீழடி அருங்காட்சியகத்துக்குச் சென்று பார்வையிட்டார். பின்னர், அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருள்களை அவர் பார்வையிட்டார்.

தொடர்ந்து, கீழடியில் நடைபெற்று வரும் திறந்தவெளி அகழாய்வுப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் த. சேங்கைமாறன், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தினம் ஒரு குறள்



**நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.** - குறள் 97

పలుకు లందు మేలు కలుగంగ నయ్యది
గుణము దప్పకున్న గురుతరమ్ము. - కురళ్ 97

मधुर शब्द संस्कारयुत, पर को कर वरदान ।
वक्ता को नय-नीति दे, करता पुण्य प्रदान ॥ - कुराल 97

Nayan Eendru Nandri Payakkum
PayaneendruPanpin Thalaippiriyaach Chol - Kural 97

# ’கள்ளக்குறிச்சிக்கு செல்லாத முதல்வர் கரூர் வந்தது ஏன்?’



**பாலக்கோடு, அக். 5:**

’கள்ளக்குறிச்சியில் சாராயம் சாவுக்கு ஆறுதல் சொல்ல முதல்வர் ஸ்டாலின் போகாதது ஏன்,” என அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

பிரசார பயணம் மேற்கொண்டிருக்கும் பழனிசாமி, தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் நேற்று பேசியதாவது:

கச்சத்தீவை மீட்பதற்கு நான் எதுவும் செய்யவில்லை என்று, முதல்வர் ஸ்டாலின் பேசியிருக்கிறார்.

கச்சத்தீவை பற்றி பேச உங்களுக்கு தகுதியில்லை. மத்தியில் காங்., ஆட்சி, மாநிலத்தில் தி.மு.க., ஆட்சி இருந்தபோதுதான், கச்சத்தீவை தாரைவார்த்தது தி.மு.க., இதை மக்களும், மீனவர்களும் மறக்கவில்லை.

மீனவர்கள் நலன் கருதி, அ.தி.மு.க., சார்பில் உச்ச நீதிமன்றத்தை நாடியவர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. 16 ஆண்டுகள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வகித்த தி.மு.க., இது குறித்து எதுவுமே செய்யவில்லை. அடுத்தாண்டு தேர்தல் வருவதால், அ.தி.மு.க., மீனவர்களுக்கு எதுவும் செய்யவில்லை என முதல்வர் பேசுகிறார். கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற அக்கறை இருந்திருந்தால், மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் அங்கம் வகித்தபோதே செய்திருக்கலாமே. தவறான கருத்தை வெளியிட்டால், அதற்கு தக்க பதிலடி தருவோம்.

கரூர் சம்பவத்தில், 41 உயிர்களை இழந்தோம். முதல்வர் இரவோடு இரவாக சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார். அதில் தவறு இல்லை. ஆனால், கள்ளக்குறிச்சியில் சாராயம் குடித்து, 68 பேர் இறந்தனர். அங்கே செல்லாதது ஏன்? அடுத்தாண்டு தேர்தல் வருவதால், கரூருக்கு ஓடோடி வந்திருக்கிறார்.

ஆட்சிக்கு வருவதற்காக யார் காலையும் பிடிக்க தயங்காத கட்சி தி.மு.க., ஆனால் அ.தி.மு.க., அப்படியல்ல. தி.மு.க.,வை வீழ்த்த வேண்டும் என்பதற்காகவே, பா.ஜ.,வும் அ.தி.மு.க.,வும் கூட்டணி சேர்ந்துள்ளது.

திறமையற்ற முதல்வர் ஸ்டாலினிடம், காவல் துறை நிர்வாகப் பொறுப்பு இருப்பதாலேயே குற்றங்கள் பெருகி உள்ளன. ஸ்காட்லாந்து போலீசுக்கு இணையாக பேசப்பட்ட காவல் துறை, ஸ்டாலின் நிர்வாகத்தால் சீரழிந்துள்ளது. தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை நடக்காத நாளே இல்லை.

கரூர் சம்பவத்தை பா.ஜ., - எம்.பி.,க்கள் குழு வந்து ஆய்வு செய்தது. பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆறுதல் சொல்ல வருவதில் தவறில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

# கோவில்பட்டியில் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில ஹாக்கி போட்டி - 38 மாவட்ட அணிகள் பங்கேற்பு

**கோவில்பட்டி, அக். 5:**

கோவில்பட்டி செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில முதல்வர் கோப்பைக்கான மாநில ஹாக்கி போட்டிகள் தொடக்கம்

முதல்நாள்போட்டியில் சேலம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் அணிகள் வெற்றி

கோவில்பட்டி, கிருஷ்ணாநகரில் உள்ள செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில் 3ம் தேதி முதல் 7ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் 38 மாவட்ட அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிருஷ்ணாநகர் செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடந்தது. தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தலைமையில், தமிழக சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

விழாவில் சார் ஆட்சியர் ஹூமென்சூ மங்கள், நகர்மன்ற தலைவர் கருணாநிதி, அர்ஜுனா விருது பெற்ற வீரரும் ஒலிம்பியனுமான முகமது ரியாஸ், திமுக பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் வீ.முருகேசன், ஜெய கண்ணன், கருப்பசாமி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, அமலி பிரகாஷ், நகர்மன்ற உறுப்பினர்கள் விஜயன், சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





முதல் போட்டியில் கன்னியாகுமரி மாவட்ட அணியும், விழுப்புரம் மாவட்ட அணியின் மோதின. இதில், 3 - 0 என்ற கோல் கணக்கில் கன்னியாகுமரி மாவட்ட அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடந்த போட்டியில்காஞ்சிபுரம்மாவட்ட அணியை புதுக்கோட்டை மாவட்ட அணி 7 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

திண்டுக்கல் மாவட்ட அணியைசேலம்மாவட்டம்அணி 5 - 0 என்ற கோல் கணக்கிலும், திருப்பத்தூர் மாவட்ட அணியை கோயம்புத்தூர் மாவட்ட அணி 9 - 0 என்ற கோல் கணக்கிலும், சென்னை மாவட்ட அணியை ஈரோடு மாவட்ட அணி 3 - 1 என்ற கோல் கணக்கிலும், திருப்பூர் மாவட்ட அணியை தஞ்சாவூர் மாவட்ட அணி 5 - 0 இன்று கோல் கணக்கிலும், பெரம்பலூர் மாவட்ட அணியை ராமநாதபுரம் மாவட்ட அணி 4 - 0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றன.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சென்னை மண்டல முதுநிலை மேலாளர் ராஜா தலைமையில் தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு அதிகாரி அந்தோணி ராஜ், கோவில்பட்டி விளையாட்டு விடுதி மேலாளர் ரத்தினராஜ் ஆகியோர் செய்து வருகிறார்.

# மக்களிடம் ஸ்டாலின் மன்னிப்பு கேட்கணும்

**சென்னை, அக். 5:**



ராமநாதபுரத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், கச்சத்தீவு விவகாரத்தை மீண்டும் எழுப்பியுள்ளார். தந்தை செய்த தவறை மறைத்து விட்டு, மகன் தற்போது ராமநாதபுரம் சென்று, மீனவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார். காங்., - தி.மு.க., இரு கட்சிகளும் செய்துள்ள துரோகத்திற்கு, தமிழக மக்களிடம் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும். இன்றும் காங்., உடன் கூட்டணி வைத்து குலாவி கொண்டிருக்கும் ஸ்டாலினுக்கு, மீனவர்களின் நலன் பற்றி பேச எந்த தகுதியும் இல்லை. கச்சத்தீவை மீட்கவும், இழந்த தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டவும் பா.ஜ., அரசு மட்டுமே நடவடிக்கை எடுக்கும். கரூரில் அப்பாவி மக்கள் பலியான விவகாரத்திலும், பா.ஜ.,வை கேள்வி கேட்க, முதல்வருக்கு தார்மீக உரிமை இல்லை. சொந்த மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத ஒரு முதல்வர், மணிப்பூர் பிரச்னை பற்றி பேசுவது வேடிக்கை.

# கரூர் சம்பவத்தை தொடர்ந்து அண்ணாமலை திடீர் டெல்லி பயணம்

**கோவை, அக். 5:**



தமிழக பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று காலை கோவையில் இருந்து விமானம் மூலம் டெல்லி சென்றார்.

டெல்லியில் அவர் பா.ஜ.க. தேசிய தலைவர்கள் மற்றும் மத்திய மந்திரிகளை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார். தமிழக அரசியல் நிலவரங்கள் மற்றும் கரூர் சம்பவம் குறித்து அவர் பேச உள்ளதாக கூறப்படுகிறது.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற கூட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியான சம்பவம் நடந்தபோது அண்ணாமலை, இலங்கையில் சுற்றுப்ப யணம் மேற்கொண்டு இருந்தார்.

தகவல் அறிந்து அவர் உடனடியாக இலங்கையில் இருந்து கரூர் திரும்பினார். பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் சம்பவ இடத்தையும் நேரில் பார்வையிட்டார்.

உரிய போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படாததே கூட்ட நெரிசலுக்கு காரணம் என தமிழக அரசு மீது அண்ணாமலை குற்றம்சாட்டி இருந்தார். மேலும் த.வெ.க. தரப்பினர் மீதும் குற்றச்சாட்டுகளை தெரிவித்தார். மேலும் கரூர் வருகை தந்த பா.ஜ.க. விசாரணை குழுவுடனும் அண்ணாமலை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்தநிலையில் அண்ணாமலை திடீரென டெல்லி செல்வது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.









# மானாமதுரை பஸ் நிலையம் அருகே உள்ள ரயில்வே கேட்டை அறிவிப்பு இல்லாமல் மூடியதால் பொதுமக்கள் அவதி

# பாதையை மூட கூடாது என பொதுமக்கள் போராட்டம்

**மானாமதுரை, அக். 5:**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பஸ்நிலையம் செல்லும் பைபாஸ் ரயில்வே கேட் நிரந்தரமாக மூடப்படுவதாக வந்த தகவலையடுத்து மக்கள் ரயில்வே கேட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். மதுரையில் இருந்து மானாமதுரை வழியாக ராமேஸ்வரத்திற்கு நான்கு வழிச்சாலை அமைப்பதற்கு முன் பைபாஸ் ரோட்டில் ரயில்வே கேட் செயல்பட்டு வந்தது. அங்கு மேம்பாலம் அமைக்கப்பட்ட பிறகு சில வருடங்களுக்கு முன்பு அந்த ரயில்வே கேட்டை மூடுவதற்கு ரயில்வே நிர் வாகம் நடவடிக்கை எடுத்தபோது அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கேட்டை மூடினால் சிரமம் ஏற்படும் எனக் கூறி போராட்டங்களை நடத்தினர். இதில் திமுக நகர செயலாளர் பொன்னுச்சாமி, காங்கிரஸ் மாவட்ட தலைவர் சஞ்சை , நகராட்சி கவுன்சிலர் புருஷோத்தமன், மற்றும் இ.கம்யூனிஸ்ட், பாஜக, மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள் பொதுமக்கள் ரயில்வே கேட்டை அகற்றி சாலையை மூட கூடாது என கோஷம் எழுப்பி ஆர்பாட்டம் நடத்தினர். தொடர்ந்து கேட் மூடப்பட்டால் ரயில் நிலையம் முன்பு ரயில் மறியல் போராட்டம் நடைபெறும் என போராட்ட குழுவினர் தெரிவித்துள்ளனர். கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக இப் பகுதியில் போக்குவரத்து நடைபெற்று வந்த நிலையில் நேற்று பைபாஸ் ரயில்வே கேட் அருகே வாகனங்கள் கேட்டை கடந்து செல்ல முடியாதவாறு தோண்டியதை தொடர்ந்து அப்பகுதி மக்கள் நிரந்தரமாக ரயில்வே கேட் மூடப்படவுள்ளதாக வெளியான தகவலை தொடர்ந்து அம் ஆனந்தவல்லிமன் நகர், பெமினா நகர் பைபாஸ் ரோடு ஆனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்கள் ரயில்வே கேட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.மானாமதுரை கீழ்கரை பகுதியில் உள்ள பொதுமக்கள் பஸ்நிலையம் செல்லும் பிரதான சாலையாகும். சிவகங்கை இளையான்குடி செல்லும் பஸ்களும் இந்த சாலை வழியாக செல்லவேண்டும். தற்போது ரயில்வே கேட் மூடப்பட்டதால் சுற்றி செல்லும் நிலை உள்ளது.

# மேகமலை அருவியில் திடீர் வெள்ளப்பெருக்கு: சுற்றுலா பயணிகள் வெளியேற்றம்

**வருசநாடு, அக். 5:**

தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழைபொழிவு இல்லாமல் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் நேற்று மாலையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. தேனி, பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்களம், குரங்கணி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 2 மணிநேரத்திற்கு மேலாக பலத்த மழை பெய்தது.

கனமழை காரணமாக அய்யனார்புரம் பகுதியிலுள்ள ஓடைகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கண்டமனூர்-வருசநாடு சாலையின் குறுக்கே பெருக்கெடுத்து ஓடிய வெள்ளநீரை வாகன ஓட்டிகள் ஆபத்தான முறையில் கடந்து சென்றனர்.

# கவிதை அரங்கம்!



வெற்றி பெற்றவர்கள்
தோல்விக்காக
காத்திருக்கிறார்கள்
தோல்வி கண்டவர்கள்
வெற்றிக்காக
காத்திருக்கிறார்கள்
இதுதான் வாழ்க்கை

எல்லோரும்
பயணிக்கிறார்கள் என்று
நீயும் பின்தொடராதே
உனக்கான பாதையை
நீயே தேர்ந்தெடு

நம்மை நாம் கேள்வி
கேட்காதவரை
நம் தவறுகளை நாம்
உணரபோவதில்லை


நிறைய பேர் செல்வதால்,
அது நல்வழி என்று
பொருளல்ல.

ஒருவனின் தெளிவான
குறிக்கோளே
வெற்றியின் முதல் ஆரம்பம்

நம்மீது நம்பிக்கை
நமக்கு இருக்கும்
வரை நம் வாழ்க்கை
நம் வசம்

நமக்கு தெரிந்தது மிகவும்
குறைவு என்பதை புரிந்து
கொள்ள பலரை நாம்
கடந்து செல்ல
வேண்டும்

# திறமையா? பயமா? எது மேலோங்குகிறது...?



நீங்கள் உங்கள் வாழ்வின் அடுத்த நிலைக்கு செல்லாதது,

உங்கள் திறமையின்மையால் அல்ல,

அதற்கான அடியை எடுத்து வைக்க முடியாமல் தடுக்கும் பயத்தினால் தான்.

நீங்கள் கனவுகளை சுமக்கிறீர்கள்...

இருந்தாலும் உங்கள் பொறுப்புகள் உங்கள் தோளில் இருக்கின்றன...

அதனால் புது முயற்சி எடுக்க பயப்படுகிறீர்கள்...

வெற்றி வேண்டும் என்று நினைக்கிறீர்கள்... ஆனால் முயற்சியில் பின்னடைகிறீர்கள்.

"மறுக்கப்படுவோமோ?" என்ற ஒரு பயம்,

"வெற்றி பெறுவோம்!" என்ற நம்பிக்கையை அடக்கிவைக்கிறது.

மறுப்புகள் காயப்படுத்தும்.

ஆனால் அந்த காயங்கள் தான் நமக்கு வலிமையை கொடுக்கும், வழியை தேடி தரும்...

வெற்றி பெற, சிறு சிறு தோல்வியை ஏற்கும் மனதை வளர்க்க வேண்டும்.

உங்களை கொண்டாட ஒரு 'ஆம்' போதும்.

அதை பெற, சில 'இல்லை'களை தாங்கி நிற்க வேண்டும்.

பயம் உங்கள் கதையை எழுத விடாதீர்கள்.

வெற்றிக்கான உங்கள் விடாமுயற்சி உங்கள் கதையின் எழுதுகோலாக இருக்கட்டும்

இப்போதே தொடங்குங்கள் — தயக்கம் வரக்கூடிய இடத்தில் தான் வளர்ச்சி பிறக்கிறது என நம்புங்கள்....

எல்லாம் நன்மையாக நடக்கும்..

வாழ்க வளமுடன்

நன்றி - ஆனந்தி

# "மச்சம்"

"த பாரு மஞ்சு!... நான் காதலுக்கு எப்போதுமே எதிரியில்லை...உன் உண்மையான காதலாக இருக்கும் பட்சத்தில் முழு ஆதரவை தருவேன்!" என்றான் கோபி தங்கை மஞ்சுவிடம்.

"சரி எங்களோட காதல் உண்மையானதுன்னு நான் எப்படி உனக்கு நிரூபிக்கிறது?"

"நாளைக்கு ஏரிக்கரையோரம் இருக்கிற கல் மண்டபத்துக்கு தனியாக நீங்க ரெண்டு பேரும் வாங்க!... "

"அய்யய்யோ... எதுக்கு,?"

"பயப்படாம வா.. உன் காதலனை ஒண்ணும் பண்ணிட மாட்டேன்"

பெரிய தயக்கத்துடன் "சரி" என்றாள் மஞ்சு.

ஏரிக்கரை கல் மண்டபத்தில், முகத்தில் முகமூடியோடு திடீரென வந்து சரமாரியாக இருவரையும் தாக்கினான் கோபி.



துவக்கத்தில் அவனைத் திருப்பித் தாக்கிய குமார் ஒரு கட்டத்தில் தன் தாக்குதலை நிறுத்திவிட்டு அடிகளை வலிய வாங்கிக் கொண்டான்.

குமாரை தரையில் தள்ளி விட்டு மஞ்சுவை அப்படியே தூக்கிக் கொண்டு ஓடிய கோபி, சற்றுத் தள்ளி நிறுத்தப்பட்டிருந்த காருக்குள் அவளைத் திணித்து முன் இருக்கைக்குச் சென்று ஸ்டார்ட் செய்து பறந்தான்.

நின்ற இடத்தில் செய்வதறியாது நின்றான் குமார்.

மறுநாள் குமாரிடமிருந்து தொடர்ந்து வந்த போன் கால்களை தவிர்த்தாள் மஞ்சு.

"எவனோ என்னை தூக்கிட்டுப் போகும் போது அமைதியாய் நின்ன இவனிடம் என் வாழ்க்கையை கொடுத்தால் என்னாவது?... நாளைக்கே ஏதாவதொரு பிரச்சனைன்னா என்னை விட்டுட்டு எஸ்கேப் ஆகிவிட மாட்டான்னு என்ன நிச்சயம்?"

மூன்று நாட்களுக்குப் பிறகு மஞ்சுவை சந்திக்க அவள் அலுவலகத்திற்கே வந்த குமார் அவளை கட்டாயப்படுத்தி கேண்டீனுக்கு அழைத்துச் சென்றான்.

'சொல்லு மஞ்சு... ஏன் என்னை அவாய்ட் பண்றே?" கோபமாய் கேட்டான் கோபி.

அவள் காரணத்தைச் சொல்ல, புன்னகைத்தான்.

"என்ன சிரிக்கிற ஒருத்தன் என்னைக் கடத்திட்டு போறதை அமைதியா நின்னு வேடிக்கை பார்த்த உன்னை நம்பி எப்படி என் வாழ்க்கையை ஒப்படைப்பேன்?"

"என்னை நம்ப வேண்டாம் மஞ்சு உன் அண்ணனை நம்பலாமே"

மஞ்சு நெற்றி சுருக்க, அவள் தாடையைத் தொட்டுத் திருப்பியகுமார் இந்த மாதிரி இடது காதுக்கு கீழே உனக்கு இருக்கிற காசளவு மச்சம் உன் அண்ணனுக்கும் இருக்குன்னு நீ ஏற்கனவே என்கிட்ட சொல்லியிருந்ததை நீ மறந்துட்ட ஆனா நான் மறக்கல! அதனால்தான் என்னை அவன் தாக்கும் போது அந்த மச்சத்தை பார்த்திட்டேன் அதற்குப் பிறகுதான் அமைதி காத்மச்சம்"

விழிகளை விரித்து வியப்பை காட்டிய மஞ்சு, "குமார்... யூ ஆர் ரியலி கிரேட் மா" என்று முகமலர்ச்சியுடன் அவன் கைகளை இறுகப்பற்ற உதறினான் கோபி.

"உன்னோட அண்ணனும் நீயும் போட்ட இந்த நாடகத்துல என் மீதான உன்னோட நம்பகத்தன்மையை நான் புரிஞ்சுகிட்டேன்!.. உன் அண்ணனை வெச்சு நீ என்னோட காதலை சோதிக்கிறே.. இப்படிப்பட்ட உன் கூட நான் மட்டும் எப்படி சேர்ந்து பயணிப்பேன்?.. ஸோ... இதுக்கு மேலயும் நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து இருக்க வேண்டாம் இன்றைக்கே சந்தோஷமா பிரிந்து விடலாம்" சொல்லி விட்டு வேகவேகமாய் நடந்தான் குமார்.


முற்றும்.



முகில் தினகரன்,
கோயம்புத்தூர்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





**கணவர்:** இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !

**மனைவி:** அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!

# தினம் ஒரு சமையல்



## கேரளா ஸ்பெஷல் கடலை கறி!

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கருப்பு கொண்டைக்கடலை | - 100 கிராம் |
| தேங்காய் துருவல் | - 4 மேஜைக்கரண்டி |
| வெங்காயம் | - 1 |
| தக்காளி | - 1 |
| பச்சை மிள்காய் | - 1 |
| மஞ்சள் தூள் | - கால் தேக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | - 1 தேக்கரண்டி |
| சீரகத்தூள் | - 1 தேக்கரண்டி |
| சோம்பு அரைதேக்கரண்டி | |
| தனியாத் தூள் | - 2 தேக்கரண்டி |
| எண்ணெய் | - 2 மேஜைக்கரண்டி |
| கடுகு | - 1 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை - தேவையான அளவு | |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை:**



கொண்டைக்கடலையை ஆறு முதல் 8 மணி நேரம் வரை ஊறவைக்கவும். குக்கரில் ஊறிய கடலை, மஞ்சள் தூள், தேவைக்கு உப்பு போட்டு மூடி 6 விசில் விட்டு, வேக வைத்து எடுக்கவும். ஒரு வாணலியில் 1 தேக்கரண்டி எண்ணெய் விட்டு தேங்காய் துருவல் லேசாக சிவற வறுக்கவும், அத்துடன் தனியாப் பொடி, சீரகப் பொடி, சோம்பு பொடி, மிளகாய் பொடி சேர்த்து லேசாக வறுத்து ஆற வைக்கவும். வறுத்த மசாலாவை தண்ணீர் விட்டு அரைத்து எடுக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு காய்ந்த பின், கடுகு, கறுவேப்பிலை போட்டு பொரிக்கவும். பின்னர், நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். பின்பு அத்துடன் நறுக்கிய தக்காளி, பச்சை மிள்காய் சேர்த்து, சிறிது உப்பும் சேர்த்து நன்கு வதங்கவிடவும். தக்காளி நன்கு வதங்கிய பின் அரைத்த மசாலாவை சேர்த்து தேவைக்கு தண்ணீர் சேர்த்து நன்கு கொதிக்க விடவும். நன்குகொதித்துவெந்ததும்எடுத்துவைத்தகொண்டைக்கடலையை சேர்க்கவும். உப்பு சரிபார்க்கவும். நன்கு கொதித்து வரும் பொழுது அடுப்பை குறைத்து வைக்கவும். தேவைக்கு ஏற்ப தண்ணீர் சேர்த்து கொதித்து இறக்கவும். சுவையான கேரளா ஸ்பெஷல் கடலை கறி தயார். வெறும் சாதம், சப்பாத்தி, ஆப்பம், புட்டுவுடன் சாப்பிட ஜோராக இருக்கும். கேரளாவில் பிட்டு இணை உணவாக இதனை பயன்படுத்துகிறார்கள்.

# அரத்தை நன்மைகள்



**தொண்டைக்கட்டு, இருமல், சளி குணமாக**

அரத்தையை வெயிலில் நன்கு காய வைத்து, தூள் செய்துக் கொள்ள வேண்டும். ¼ தேக்கரண்டி தூளை, 1 தேக்கரண்டி அளவு தேனுடன் கலந்து, தினமும் காலை, மாலை வேளைகளில் சாப்பிட்டு வர வேண்டும் அல்லது ஒரு சிறு துண்டு அரத்தையை வாயிலிட்டு நன்கு மென்று சுவைக்க காரமும் விறுவிறுப்பும் உண்டாகி உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கும். இந்த உமிழ்நீரை உள்ளுக்கு விழுங்க வேண்டும்.

**அடிப்பட்ட வீக்கம், வலி குறைய**

அரத்தையை வெந்நீர் விட்டு அரைத்து பசைப் போல செய்து பாதிக்கப்பட்ட இடத்தில் பூச வேண்டும்.

**பல் வலி, ஈறுவீக்கம் குணமாக**

அரத்தைத் தூளை சம அளவு பற்பொடியுடன் கலந்து காலை, மாலை வேளைகளில் பல்துலக்கி வர வேண்டும்.

சித்தரத்தை ALPINIA OFFICINARUM என்கிற வகையும் அரத்தையில் உண்டு. சிற்றரத்தை என்றும் கூறப்படும். இதன் வேர்க்கிழங்கும் நாட்டு மருந்துக் கடைகளில் காய்ந்த நிலையில் கிடைக்கும். இது சீனாவில் பெருமளவு வளர்க்கப்படுகின்றது. இதற்கு அரத்தையைவிட அதிக மணமும் காரச்சுவையும் உண்டு. இதனுடைய மருத்துவப் பயன்களுக்காக வங்காள தேசத்திலும், வட இந்தியாவிலும் பெருமளவு வாணிப ரீதியாக பயிர் செய்யப்படுகின்றது.

காய்ந்த வேர்கிழங்குகள், மார்புச்சளி, இருமல், பல் நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் தன்மையையும், பசி அதிகரிக்கும் பண்பினையும் கொண்டவை.

# சினிமா

## நவ.6-ல் ரீரிலீஸ் ஆகிறது 'நாயகன்'




கமல்ஹாசனின் பிறந்த நாளையொட்டி, 'நாயகன்' திரைப்படம் ரீரிலீஸ் ஆகவுள்ளது.

பழைய படங்கள் மீண்டும் ரீ-ரிலீஸ் ஆகும் ட்ரெண்டில் இணைந்துள்ளது 'நாயகன்'. நவம்பர் 6-ம் தேதி இப்படம் ரீ-ரிலீஸ் செய்யப்படவுள்ளது. நவம்பர் 7-ம் தேதி கமல்ஹாசன் தனது 71-வது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார். இதனை முன்னிட்டு 'நாயகன்' ரீரிலீஸ் ஆகவுள்ளது. இதற்கான மெருக்கேற்றும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மணிரத்னம் இயக்கத்தில் கமல் நடிப்பில் வெளியான படம் 'நாயகன்'. 1987-ம் ஆண்டு வெளியான இப்படம் பெருமளவில் கொண்டாடப்பட்டது. இப்போது இப்படத்தினை கல்ட் க்ளாஸிக் என்று கொண்டாடி வருகிறார்கள். இளையராஜாவின் இசையில் அமைந்த பாடல்களும் இதன் வெற்றிக்கு ஒரு காரணம்.

இதில் ஜனக ராஜ், சரண்யா பொன் வண்ணன், டெல்லி கணேஷ், நிழல்கள் ரவி, நாசர் உள்ளிட்ட பலர் கமலுடன் நடித்திருந்தார்கள். மும்பையைப் பின்னணியாக கொண்டு இப்படத்தை உருவாக்கி இருந்தார் மணிரத்னம். இதற்கு ஒளிப்பதிவாளராக பி.சி.ஸ்ரீராம் பணிபுரிந்திருந்தார். இப்படத்துக்கு பின்பு கமல் - மணிரத்னம் இருவரும் இணைந்து பணிபுரிந்த படம்தான் 'தக் லைஃப்'. அப்படம் பெரும் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது.



டிடி திவ்யதர்ஷினிக்கு அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர் தற்போது படவிழாக்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை தொகுத்து வழங்கி வருகிறார். டிடி தற்போது சிவப்பு நிற கிளாமர் உடையில் போஸ் கொடுத்து ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

## பெண் குழந்தைகளை குறி வைக்கும் சைபர் க்ரைம்



குற்றம் தெருக் குற்றங்களை விடப் பெரிதாகி வருகிறது சைபர் குற்றங்கள்.

பாலிவுட் ஸ்டார் அக்ஷய் குமார் சைபர் குற்றங்கள் குறித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

சில மாதங்களுக்கு முன்பு என் வீட்டில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

என் மகள் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்தாள். சில வீடியோ கேம்களை நீங்கள் எதிர் திசையில் யாருடனும் விளையாடலாம். நீங்கள் தெரியாத ஒருவருடன் விளையாடுகிறீர்கள்.

நீங்கள் விளையாடும்போது, சில சமயங்களில் அங்கிருந்து ஒரு செய்தி வரும்... அப்படி என் மகளுக்கும் ஒரு குறுஞ்செய்தி வந்தது.

"நீங்கள் ஆணா பெண்ணா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு என் மகள் பெண் என்று பதிலளித்தாள். பின்னர் மீண்டும் ஒரு குறுஞ்செய்தி வந்தது.

அதில், உங்களுடைய நிர்வாணப் படங்களை எனக்கு அனுப்ப முடியுமா? என்று இருந்தது. இதனால் பயந்துபோன என் மகள், எல்லாவற்றையும் அணைத்துவிட்டு என் மனைவியிடம் சென்று நடந்தவை குறித்து கூறினார்.

இப்படித்தான் விஷயங்கள் தொடங்குகின்றன. இதுவும் சைபர் குற்றத்தின் ஒரு பகுதி... நமது மகாராஷ்டிரா மாநிலத்தில், ஒவ்வொரு வாரமும் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளில், சைபர் வகுப்பு (Cyber Period) என்று ஒரு வகுப்பு இருக்க வேண்டும். அங்கு குழந்தைகளுக்கு இது குறித்து விளக்க வேண்டும் என்று நான் முதலமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குற்றம் தெருக் குற்றங்களை விடப் பெரிதாகி வருகிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தக் குற்றத்தைத் தடுப்பது மிகவும் முக்கியம்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com